# சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதால் தமிழ் பிரதேசங்கள் இருளில் மூழ்கும் அபாயம்!

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 24-8-86 ஞாயிறு (ஆவணி 8 துல்ஹ 17) முழக்கம் 201

## புலிகள் அபாய அறிவிப்பு

சட்டவிரோத மின்பாவனை தமிழீழப் பகுதியில் அதிகரித்து வருவதால் தமிழ் பிரதேசம் முழுவதும் இருளில் மூழ்கும் அபாயநிலை உருவாகிவருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர். இது தொடர்பாக புலிகளினல் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:- தமிழீழப் பிரதேசங்களில் மின்சாரம் ஓர் இன்றியமையாத தேவையாக உணரப்படுகிறது. இதற்கு மாற்றமைவான திட்டங்கள் தீட்டப்படுவது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். ஆனல் எதுவித தயாரிப்புமற்ற இன்றைய சூழ்நிலையில் "கையே கண்ணைக் குத்துவது போல" சகல பிரதேசங்களுக்குமே மின்சாரம் அற்றுப்போகும் விதமாக தமிழீழ மக்கள் செயற்படுவது உகந்ததல்ல இந்த வகையில் மின்சார சட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணுக மின்சாரத்தைப் பெறுவது, பயன் படுத்துவது, மின்சார உபகரணங்களை (குறிப்பாக மின் மாற்றியை) பழுதடையச் செய்கிறது. இதனல் குறிப்பிட்ட அப்பிரதேசம் முழுவதுமே இருளில் மூழ்குகிறது. இன்று தமிழ் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள நிலைமையால் மின்சார சட்ட —6ம் பக்கம் பார்க்க

★ பிரதமர் ராஜீவிடம் எம். ஜி. ஆர். வேண்டுகோள்

# தமிழீழப் போராளிகளின் மீது எந்த நிபந்தனையும் வேண்டாம்

## எவரையும் தமிழகத்திலிருந்து வெளியேற்ற முடியாதெனவும் முதல்வர் அறிவிப்பு

(சென்னை)

சென்னையில் தங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப் போராளி இயக்கங்களின் தலைவர்களை இந்திய அரசு எந்த வகையிலும் நிர்ப்பந்திக்கக் கூடாது எ. றும், எந்தவொரு தீர்வையும் இவர்கள் மீது திணிக்கக் கூடாதென்றும் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதலமைச்சரின் இந்த வேண்டுகோள் மின்துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரனல் தொலைபேசி மூலம், பிரதமரின் செயலாளரிடம் தெரிவிக்கப்பட்டதாக "இந்துஸ்தான் டைம்ஸ்" அறிவித்துள்ளது.

தமதுவாசஸ்தலத்தில்மூன்று டில்லி அமைச்சர்கள் போராளிகள் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைபற்றி பல தவருன தகவல்கள்பத்திரிகைகளில் வெளியாகியுள்ளதையும் முதலமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய அரசின் உத்தரவுக்குப் பணிய மறுத்தால் போராளிகள் தமிழ் நாட்டிலிருந்து வெளியேற்றப் படுவார்கள் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளையும் எம். ஜி. ஆர். முற்ருக மறுத்துள்ளார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் எந்த முடிவும் போராளிகளின் பூரண சம்மதத்துடன் எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர்களை நிர்ப்பந்திப்பதாக எதுவும் அமையக் கூடாது என்றும் முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

மணமகனின் மரணச் சடங்கால்

## வேலணை சோகமயமாக நேற்றுக் காட்சியளித்தது

நேற்று முன்தினம் வண்ணூர் பண்ணையில் 'ஷெல்' தாக்கி ம.,ணமான மணமகன் உதயசூரி..ன், ..சிரியர் இராசதுரை ஆகியோரின் மரணச் சடங்குகள் நேற்று வேலணையில் நடைபெற்றன.

நேற்று முன்தினம் மாலை விசேஷ வள்ளமொன்றின் மூலம் அராலியிலிருந்து இச் சடலங்கள் வேலணைக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

உதயசூரியனின் மரணச் சடங்கு அவரது பெற்ருரின் இல்லத்தில் நடைபெற்றது. அவர் கரம்பிடித்துத் தாலிகட்டிய அன்புத் துணைவியார் வேதனையைத் தாங்க முடியாதவராக அழுதவாறு தமது கண —6ம் பக்கம் பார்க்க

## முறிகண்டியில் ராணுவமும் புலியும் 90 நிமிடம் மோதல்

முறிகண்டியில் நேற்று முன்தினம் ஒன்றரை மணி நேரம் ராணுவத்தினருக்கும் தமக்கும் இடையே கடும்மோதல் இடம் பெற்றதாகவும் மோதலின் பின்னர் ராணுவம் இழப்புக்களுடன் கிளிநொச்சி முகாமிற்குள் புகுந்து கொண்டதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் பிற்பகல் நான்கு மணியளவில் மாங்குளம் முகாமிலிருந்து எட்டுக் கவச வண்டிகள், எல்ப் ட்ரக் ஒன்று, டெலிகா வான் ஆகியன சகிதம் ராணுவத்தினர் ரோந்து வந்து கொண்டி —6ஆம் பக்கம் பார்க்க

யாழ். ஆஸ்பத்திரியில்

## மூன்று சிறுவருக்கு மூளைக் காய்ச்சல்

(வண்ணூர்பண்ணை)

யாழ். குடாநாட்டில் மீண்டும் மூளைக்காய்ச்சல் நோய் பரவிவருவதாக .ஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் இந்நோயினல் பீடிக்கப்பட்ட ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் மரணமானது தெரிந்ததே.

இந்நோயினல் பாதிக்கப்பட்ட மூன்று சிறுவர்கள் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் பொதுமககள்காய்ச்சல் நோய் காணப்பட்டால் உடனும் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

## மாகாணசபை மசோதா அடுத்தமாதம்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் திட்டம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்று ஜனதிபதி ஜெயவர்த்தன நேற்று அறிவித்துள்ளார்.

## ராணுவத்தினரின் பவனியால் ரயில் பயணிகள் பாதிப்பு

(வவுனியா)

யாழ். கண்டி வீதியில் மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் இராணுவத்தினர் வாகனங்களில் சென்றதால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவிருந்த பயணிகள் தமது பயணத்தைத் தொடர முடியாது வவுனியாவிலேயே தங்கினர்.

இதனல் இனிமேல் யாழ். தேவி வவுனியாவில் இருந்து புறப்பட்ட பின்னர் ரா ணுவத்தினர் கண்டி வீதியல் ...6ம் பக்கம் பார்க்க

## நிலாவெளியில் கி. சேவகர் துப்பாக்கி சூட்டுக்குப் பலி

(திருமலை)

திருமலை மாவட்டத்தின் கும்புறுப்பிட்டியபகுதி கிராமசேவகர் திரு. எஸ். நடராஜா நேற்றுக்காலை இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தமது மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் நிலாவெளியில் வைத்து இவர் கொல்லப்பட்டதாக — 6ஆம் பக்கம் பார்க்க

ஜனதிபதி புலத்சிங்களவில் அறிவிப்பு

## என்னை வற்புறுத்த முடியாது; சர்வஜன வாக்களிப்பும் இல்லை

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகளில் எவையேனும் அரசியலமைப்புக்கு முரணனதாகக் காணப்பட்டால் அவை நீக்கப்படும் என ஜனதிபதி ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

புலத்சிங்கள தொகுதியில் நேற்று இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனதிபதி இவ்வாறு கூறினர்.

எதைப் பற்றியும் சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடத்துவது பற்றித் தீர்மானிக்கும் உரிமை ஜனதிபதிக்கு மட்டுமே உண்டு எனவும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

எவரும் பலவந்தப்படுத்தி இவ்வாலோசனைகளைக் கைவிடுமாறு தம்மை நிர்ப்பந்திக்க முடியாது எனவும் தெரிவித்த ஜனதிபதி இவற்றை ஏற்காதவர்கள் தமது கருத்துக்களை வெளியிடலாம் எனக் கூறினர்

## கல்முனைப் பகுதி மக்கள் வீடுகளுக்கு திரும்புகின்றனர்

(மட்டக்களப்பு)

கல்முனைப் பகுதி மீண்டும் வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கிறது போக்குவரத்துச் சபை பஸ்கள் மற்றும் வாகனங்களும் இப் பகுதியூடாகச் செல்கின்றன. வீடுகளை விட்டு இடம் பெயர்ந்தோர் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு செல்கின்றனர்.

இதேவேளை கல்முனை தபாற் கந்தோரில் தபால் தரம்பிரிக்கும் வேலைகள் மட்டுமே நடை ...6ம் பக்கம் பார்க்க

## நேர்முகப் பரீட்சை

(வல்வெட்டித்துறை)

பிர்மன் ஆங்கில சுருக்கெழுத்து 150-வது வருட நிறைவை முன்னிட்டு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் மூன்று இடங்களில் ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சியளிக்கும் மாபெரும் திட்டத்திற்கு வடமராட்சிப் பகுதியில் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கரவெட்டி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

## அலங்கார உற்சவம்

குப்பிளான் சொக்கர் வளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி திங்களன்று ஆரம்பமாகின்றது. விழா தொடர்ந்து பத்து நாட்கள்வரை நடைபெறும். இறுதி நாளன்று அன்னதானமும் இரவு. பஞ்சமுக விநாயக அர்ச்சனை, திருவூஞ்சல் என்பனவும் இடம்பெறும்.

## பிறந்தநாள் ★ வாழ்த்து ★

❈ வடலியடைப்பு, கனகசிங்கம் மகேஸ்வரி தம்பதியின் மகள் சைலாஜினி இன்று தனது ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❈ சங்குவேலி வடக்கு, மகேந்திரதாசன் பவானி தம்பதியின் மகள் சங்கீதா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## யாழ். மாவட்ட கலாசாரப் பேரவைகளின் நாதஸ்வரக்கலை உபகுழு நடாத்தும்

# பயிற்சி வகுப்பு

01. எதிர்வரும் 12.10 86 விஜயதசமி தினத்தன்று ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சூழலில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தவில் நாதஸ்வரக் கலைப்பயிற்சி வகுப்பிற்குச் சேரவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பதாரிகள் 10 வயது தொடக்கம் 20 வயதிற்கு மேற்படாதவராயும் தவில் நாதஸ்வரக்கலை பயில விருப்பார்வமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

பயிற்சி வகுப்புகள் ஆரம்பத்தில் சனி; ஞாயிறு தினங்களில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சூழலில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் பிரபல்ய தவில், நாதஸ்வர கலைஞர்களினால் கற்பிக்கப்படும். பயிலுநருக்கு மதிய போசனமும் வழங்கப்படும்.

03. விண்ணப்பங்கள் 10.09 86ன் முன் கிடைக்கக்கூடியதாக, தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை எனும் விலாசமிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை நேர்முகமாகவும், தேவஸ்தான அலுவலகத்தில் கையளிக்கலாம். இவ்விண்ணப்ப தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் ''தவில் நாதஸ்வர பயிற்சி'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
தலைவர், யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை,
யாழ். மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,

20 08.86.

B/1486


## வரி விளம்பரம்

வெளிநாடு செல்லுங்கள் பேனா நண்பர் உதவியுடன். ஜேர்மன் படியுங்கள் தபால் மூலம். விபரங்களுக்கு ரூபா 2/- முத்திரை அனுப்பவும்: S. வேலாயுதன், சதாசிவம் வீதி, கைதடி, நுணுவில், சாவகச்சேரி R/25331

பொன்னாலையில சகாயவிற்பனை

28.8 86இல் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேர்த் திருவிழாவில் மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் ரூ. 15/-ற்கு எமது தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலிதீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும், அறிவு நூல்களும், கீரைவிதைப் பைக்கற்றும் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்
B/1485

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதைகள் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளவும், மில்க்வைற்-யாழ்ப்பாணம்
B/1483

### காணி விற்பனை

சகல வசதிகளையும் உடைய ஒரு பரப்பு காணி கீழே குறிப்பிடும் முகவரியில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. எஸ் என். ராஜவேல், இல:78, தேசாவில் பிள்ளையார் வீதி, பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். (பத்திரகாளி கோவிலுக்கு முன்னால்)
R/25335

# பிரயாண ஒழுங்குகள்

## டென்மார்க், கனடா, லண்டன்

(வாரத்துக்கு இருமுறை)

எமது முகவர் குறுகிய காலத்துக்குள் துரிதகதியில் அழைத்துச் செல்கிறார்,

### சவூதி அரேபியாவிற்கு

HARBOUR, சுப்பவைசர், பிளாஸ்ரிக் கொம்பனி, தச்சுத் தொழில், மேசன், பிளம்பர் ஆகியோருக்கு குறுகிய காலத்திற்குள் பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது. இத்துடன் அபுதாபியிலும் ஹோட்டல் கிளினர்ஸ், வைத்தியசாலை ஆகியவற்றிற்கும் 18 வயது தொடக்கம் 40 வயது வரை இரண்டு வாரத்திற்குள் பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.

V. அம்பிகைபாகன்
முத்தட்டுமட லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

N. சிவஞானம்
மகாவித்தியாலய அருகாமை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை,
பஸ் இலக்கம் 770

# பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- ஈராக்
- சவூதி அரேபியா
- டென்மார்க்
- ஜேர்மனி

(1) கனடா, டென்மார், ஜேர்மனி செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) மேசன், தச்சுத் தொழிலாளர், எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

இ. தேவராசா,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
(ஆஸ்பத்திரி அருகாமை) R/25326

# "தொழிற் பயிற்சிகள்"

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இலகுவாக வேலைவாய்ப்பை பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

❈ ரெலிவிஷன், வீடியோ டெக் றேடியோ, றிப்பியறிங்,
சகல இன ரெலிவிஷன், டெக் திருத்தும் முறை, றேடியோ திருத்தும் முறை இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம் முழுக்கட்டணம் 400/-

★ **Computer Programming**
(Basic Language)
Radio Shach, B. B. C., Commoder Computer களில் 50 மணித்தியாலத்திற்கு மேல் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம் முழுக்கட்டணம் 400/-

★ **Diploma in Draughtsmanship**
காலம்:- 5 மாதம் முழுக்கட்டணம் 300/-

❈ றீவைண்டிங்
ரான்ஸ்போமர், மோட்டர், மின்விசிறி, றீவைண்டிங் செய்யும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம்- 3 மாதம் முழுக்கட்டணம் 400/-

❈ எலக்ரிக்கல் வயறிங்
காலம்:- 2 மாதம் முழுக்கட்டணம் 250/-

குறிப்பு:-
(1) O/L சித்தியடைந்த இருபாலாரும் சேரலாம்.
(2) வகுப்புகள் சனி, ஞாயிறு, கிழமை நாட்கள் நடைபெறும்.
(3) பயிற்சியின் முடிவில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட LONDON BASED CERTIFICATE வழங்கப்படும்.
(4) விண்ணப்பத்தை 30.08-86க்கு முன் விண்ணப்பிக்கவும்.

நெல்லியடி, சாவகச்சேரியில் உள்ள எமது கிளை நிறுவனத்திலும் மேல் கூறிய குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு:

# Jaffna Technical Institute

52/1, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.
தபாற்கந்தோர் வீதி, (தபால் கந்தோர் அருகாமை) நெல்லியடி.
141, கண்டி வீதி, (யூனியன் பேக்கறி அருகாமை) சாவகச்சேரி.

R/25330

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் ஆரம்பிக்கும்

# வெளிவாரி பட்டப்படிப்புகள்

### கல்வியாண்டு 1987/88

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் மாதம் 7ம் திகதி (7.9.86) ஆரம்பமாகின்றது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்சிப் பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகஸ்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B.A)
வர்த்தகமாணி (B. Com)
விஞ்ஞானமாணி (B. Sc) (கணிதம்)
சட்டமாணி (LL. B)

விண்ணப்பங்கள் ஓகஸ்ட், 30ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத் திரட்டினையும்பெற ''பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்'' என்ற பெயருக்கு ரூபா 10ற்கான காசுக்கட்டளையுடன் 9'' x 4'' அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

கிளை: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
101/10, ஸ்ரான்லி வீதி,
(மக்கள் வங்கிக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

R/24060

### அகதிகள் புனர்வாழ்வுக் கழக தலைவர் பேச்சு

# இன்று நிவாரணமாக தரப்படும் உதவியே எதிர்கால அபிவிருத்திக்கான மையப்புள்ளி

இன்று அகதிகளாகியுள்ள பொதுமக்கள் எங்களின் அந்நியர்களல்லர். அவர்களைக் கதியுற்றவர்களாக்குவதற்கு நாம் பணிபுரிய வேண்டும். இன்று நிவாரணமாக வழங்கப்படும் உதவியே எதிர்கால அபிவிருத்திக்கான மையப்புள்ளி.

இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைப் பதவியை ஏற்ற பின்னர் அதன் முதலாவது ஆளுநர் சபைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார். அவரது பேச்சின் சுருக்கம் வருமாறு:-

"இந்த நிறுவனம் இன்றைய கட்டத்தின் மிக முக்கியமான நிறுவனமாகும் இன்றைய போராட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடி புனர்வாழ்வு நிவாரணங்களை அளிக்கும். அரச தொடர்பற்ற, சமயச்சார்பற்ற ஓரேயொரு நிறுவனம் இதுவேயாகும். இதனால் நமது பொறுப்பு மேலும் பன்மடங்காகும். இப் பொறுப்பினை நான் ஏற்றபோது இந்த நிறுவனத்திற்கு காரணமாயிருந்த திரு கே சி நித்தியானந்தன் அவர்களையும், இது நன்கு நிலைத்துநிற்க உதவிய திரு கா. விசுவலிங்கம் ஐயா அவர்களையும் நினைவு கூருகின்றேன். அத்துடன் இந் நிறுவனம் சிறப்பாக விளங்குவதற்கும், நிலைநிற்பதற்கும் உதவுகின்ற திருவாளர்கள் கணபதிப்பிள்ளை, கந்தசாமி ஆகியவர்களையும் எண்ணிக் கொள்கின்றேன்.

இவர்களின் சேவையும், ரி. ஆர். ஓ. ஆற்றும் பணியும் ஈழத்தின் தமிழ் மக்களின் பிரச்சினையில் ஓர் அங்கமாக, பிரிக்கமுடியாத அம்சமாக நிலைத்துக் கொண்டது. இவ்வேளை நமக்குள்ள ஒரேயொரு கடமை எமக்குக் கிடைக்கும் நிதியை நாம் உண்மையாக தேவையுள்ளவர்களுக்கு, வேகமாக, தாமதமின்றி எவ்வித துஷ்பிரயோகத்திற்கும் இடமளிக்காது வழங்கி, அவர்கள் அதனால் நிவாரணம் பெறுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதேயாகும்.

நாம் பிரதானமாக இரு வகையான உதவிகளைச் செய்கின்றோம்.

குடும்பத்தின் பிரதான அங்கத்தினர் ஒருவர் வன்செயல் காரணமாக இறக்கும்பொழுது அக் குடும்பத்திற்கு நிதியுதவி செய்தல்.

இறந்தவர்களின் குடும்பத்திற்கும், காயப்பட்டோர் குடும்பத்திற்கும், வீடுவாசல்களை இழந்தோருக்கும் தமது பாரம்பரியமான வாழ் இடங்களை விட்டு பிற தமிழர் பிரதேசங்களில் தஞ்சம் புகுந்தோருக்கும் அவர்கள் இயலக் கூடியளவிற்கு புதிய வாழ்வைப் பெற வேண்டிய உதவிகளைச் செய்தல்.

முதலாவது உடனடியாகச் செய்தல். இது உண்மையில் அத்தியாவசிய உதவிகளுக்கு செய்தல். இரண்டாவது மிக முக்கியமானது அரசாங்கமே இன்று தமிழ்ப்பகுதிகளில் தமது அபிவிருத்தி திட்டங்களை நடைப்படுத்துவதைஏறத்தாழ கைவிட்ட இன்றைய நிலையில் ரி.ஆர் ஆர்.ஓ வழங்கும் புனர்வாழ்வுக்கான உதவிக் கொடுப்பனவு மிக முக்கியமானது. மக்கள் சுய உழைப்பை மேற்கொண்டு தமது தேவைகளை பூர்த்தி செய்ய உதவுவது இதுவேயாகும். இதனை வெறுமனே நிவாரணமாய்க் கொண்டுவிடக் கூடாது இது உண்மையில் ஒருவித அபிவிருத்தி நடவடிக்கையாகவே கொள்ள வேண்டும். இந்த நிவாரணமாக வழங்கப்படும் உதவிகள் தான் எதிர்கால அபிவிருத்திக்கான மையப் புள்ளிகள். எனவே நிவாரண வடிவில் கொடுக்கப்படும் இந்த அபிவிருத்தி உதவிகள் சம்பந்தப்பட்ட சகலரும் பங்குபற்றும் நடவடிக்கைகளாக அமைதல் வேண்டும். அதாவது இவை ஒவ்வொருவரும் பங்கு கொள்ளும் ஜனநாயக விதிகளாக இயங்க வேண்டும். இதனை சரியாகச் செய்வதற்கு நாம் அடிநிலை தாபனங்கள் ஒவ்வொன்றினதும் உதவியைப் பெற வேண்டும்.

எந்தவொரு வகையிலும் துஷ்பிரயோகங்கள் ஏற்படாது நாம் தடைசெய்யவேண்டும். மற்றவர்கள் பார்த்து பின்பற்றும் வகையில் முன் உதாரணமாக விளங்கவேண்டும். இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் தங்கள் அபிவிருத்தியென ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த உதவியை நாடி நிற்பவர்கள் வேறெந்த சதியுமற்றவர்கள். ஆனால் இவர்கள் அகதிகளென்றாலும்எமக்கு அந்நியர்களல்ல. எமது உறவினர். ஒரே பெரும் குடும்பத்தினர். எமது இனத்தவர். இந்த அகதிகளை நீதியுள்ளவர்களாக்குவதற்கு நாம் முற்றிலும் பிறநாட்டு உதவிகளை மாத்திரம் எதிர் நோக்கலாகாது. பிறநாட்டு உதவியில்லாது இந்தப் பெரும் பணியைச் செய்யமுடியாது தான். ஆனால் பிறநாட்டு உதவிகள் அகதிகளைக் கதியுடையோர் ஆக்கிவிடாது அவர்களை கதியுடையோராக்குவது எமது பொறுப்பு அவர்கள் எம்முடன் கூடிவாழவேண்டிய சமூகச் சூழ்நிலை ஏற்படுத்தவேண்டும். அவர்களுடைய "புதுவாழ்வு" எமக்கு சிரத்தையுண்டு என்று காட்டும் வகையில் நாம் சிறு தொகையாவது எமது பங்களிப்பாக கொடுக்க முன்வர வேண்டும். உண்மையில் இந்தத்தொகை எமது ஆர்வத்தை எடுத்துக்காட்டவேயாகும். பணமில்லாதவர்கள் பொருள்களாக உதவி செய்யலாம். இந்த அம்சத்தை நாம் நமது சகோதரர்களிடையே வற்புறுத்தல் வேண்டும். இந்த புனர்வாழ்வுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள், அவ்வத்துறைகளில் நிபுணத்துவம் கொண்டவர்களின் ஆலோசனைகளையும் கண்காணிப்பிற்கான உதவிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இது தருமப் பொறுப்பு. இது ஒரு தெய்வீகக் கடமை இதனை பணிவுடனும், துணிவுடனும், அடக்கத்துடனும், துரிதத்துடனும், தூரதிருஷ்டியுடனும், அன்றாட அவதானிப்புடனும் கண்டனங்களுக்கு அப்பாற்பட்ட வகையிலும் விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு செய்து முடிப்பிக்கவேண்டிய பலத்தை மக்களிடமிருந்தும், இறைவனிடமிருந்தும் நாம் பெற்றுக் கொள்வோமாக."

### வங்கி முகாமையாளர் ஆறுதல்

# கடன்பட்டோர் கலக்கம் மேலிடத்திற்கு அறிவிப்பு

(சுன்னுகம்)

சுன்னுகம் இலங்கை வங்கிக் கிளையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிக் கடனைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் திருப்பிச் செலுத்தாத வாடிக்கையாளர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் உரையாற்றினார்.

"நாட்டில் தற்போது தோன்றியுள்ள நிலைவரங்கள் காரணமாக நீங்கள் பட்ட கடனை மீளச் செலுத்த முடியாத நிலை உருவானதை நான் நன்கு அறிவேன். உற்பத்திகளுக்குரிய சந்தை வாய்ப்புப் பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாகக் கடனை மீளச் செலுத்துமாறும் நான கோரவில்லை. உங்களுக்குண்டாகியுள்ளகஷ்ட நிலையைத் தனித்தனியாக அறிந்து அதனை மேலிடத்திற்கறிவித்து கடனைத் திருப்பச் செலுத்த ஓர் ஒழுங்கு முறையைக் கொண்டுவர மறு அட்டவணைப்படுத்துவதன் மூலம் சில சலுகைகளை வழங்க இலங்கை வங்கி முன்வந்துள்ளது. தகுந்த காரணங்களைக் கொண்டிராதவர்கள்மேல் வழக்குத் தாக்கல் செய்தே அறவிடப்படவுள்ளது" என்று, அப்போது அவர் சொன்னார்.

சுன்னுகம் இலங்கை வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது கிளைமுகாமையாளரும், வங்கி அதிகாரியும் உடனிருந்தனர்.

தனித்தனியாகச் சந்தித்த பலரும் தமது கஷ்ட நிலையை விபரமாகக் கூறியபோது, மாவட்ட முகாமையாளர் அறிக்கையாகத் தயாரித்து மேலிடத்திற்கு ஆலோசனைக் கனுப்புவதாகக் கூறினார். கடன் பணத்தைக் கட்டித் தீர்க்க முடியாத நிலைஏற்பட்ட காலத்திற்கான வட்டிக்கணிப்பிலும் சலுகை வழங்குமாறு பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

### அரச நன்கொடைப் பணம்

# சனசமூக நிலையங்களுக்கு போதாததாக இருக்கிறது

(சுண்டுக்குளி)

"சகல சன சமூக நிலையங்களுக்கும் வழங்கப்படும் வருடாந்த அரச நன்கொடைப் பணம் போதாமலுள்ளதால் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் அதிகரித்துத் தரவேண்டும்", என்று கோரும் மகஜரொன்றை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத் தூதுக்குழு யாழ். உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட்டிடம் கையளித்துள்ளது.

சமாஜப் பொதுக் கூட்டச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா தலைமையில் சென்ற இத் தூதுக்குழுவில் திரு ச. ம. தவராசா (தலைவர்), திரு. சி. இராமநாதன், ஆசிரியர் திரு. ஆ. மார்ட்டீன் ஆகியோர் அங்கம் வகித்தனர். தலைமைக் காரியாலய சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரி. பாஸ்கரனும் சமுகமளித்திருந்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட சன சமூக நிலையங்களுக்கு அரச நன்கொடைப் பணம் கிடைப்பதில் வருடக் கணக்காகத் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும், இவ் அரச நன்கொடைப் பணங்களைத் தாமதமின்றி வழங்க யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்கள் மூலம் ஆவன செய்யும்படியும் இத் தூதுக்குழுவினர் உள்ளுராட்சி உதவி ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டனர்.

உதவி ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரஸ்தாப மகஜரில் கோரப்பட்டுள்ளதாவது மயிலிட்டிப் பகுதித் தண்ணீர் விநியோகத்திட்ட வேலைகள் பூர்த்தியாகிப் பத்துமாதங்கள் முடிவடைந்துவிட்டன பிரதான வீதிகளுக்கே 'பைப்' பூட்டப்பட்டுள்ளது. குறுக்கு வீதிகளுக்கும் 'பைப்' பூட்டித் தருவதுடன் ஏற்கனவே விநியோக வேலைகள் பூர்த்தியான பகுதிகளுக்குத்தானும் தண்ணீர் விநியோகததை ஆரம்பிக்க நடவடிக்கைஎடுக்க வேண்டும். பொதுமக்களுக்கு வசதியாகக் கிராமத்தின் மத்தியிலேயே பொது நூலகங்களை அமைக்கவேண்டும் சன சமூக நிலையங்கள் மண்டபங்களை அமைப்பதற்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்துதரவேண்டும் சிறப்பான முறையில் இயங்கும் சன சமூக நிலையங்கள் கைத்தொழில்துறைகளை ஆரம்பிக்க நிதி ஒதுக்கீடு செய்துதரவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள், ஆலயங்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகை வழங்கப்படுவதைப் போன்று சன சமூக நிலையங்களுக்கும் மின் கட்டணச் சலுகை வழங்கப்பட வேண்டும்.

# குழாய் நீர் விநியோகம் நெடுந்தீவில் பாதிப்பு

(நெடுந்தீவு)

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நெடுந்தீவின் குழாய் நீர் விநியோகம் செயலற்றுக் கிடக்கிறது.

நீரைச் செலுத்தும் இயந்திரம் பழுதடைந்தமையால் புதிய இயந்திரத்தையும், மேலதிக நீர் விநியோகத்திற்கெனக் குழாய்களையும் இணைப்பதற்கான ஒப்பந்த வேலைகளை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது.

அவை தற்பொழுது பூரணமடையாத நிலையில் இவற்றுக்கெனக் கொண்டுவரப்பட்ட உபகரணங்கள் வீதியோரங்களிலும் வீதியோர வீடுகளிலும் காத்துக் கிடக்கின்றன. குழாய்நீர் விநியோகத்தைச் சீர் செய்யும் பொறுப்பு வாய்ந்த மேலதிகாரிகள் நெடுந்திவுக்கு விஜயம் செய்வதற்குத் தயங்கி, பிரயாணக் கஷ்டங்களைக் காரணம் காட்டுவதாகத் தெரிகிறது.

இதற்கிடையே நீர்த்தாங்கி துருப்பிடித்துப் பழுதடைந்துள்ளமையால் அதனைப் புதுப்பிப்பதும் அவசியமாகின்றது. இந்நிலையில் பொது மக்கள் குடிநீரைப் பெறுவதற்குப் பல இன்னல்களைத் தொடர்ந்து அடைந்து வருகின்றனர். குடிநீர் நெடுந்தீவில் பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருவதும் அறிந்ததே.

உரிய அதிகாரிகள் வேலைகளைப் பூர்த்தி செய்யாது தாமதப்படுத்துவதனல்மேலும் பழுதுகள் அதிகரித்து நீர் விநியோகம் சீரடையப் பல காலம் செல்லலாம் எனவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

### டாக்டர் நந்தி சொல்கிறார்

# எழுத்தாளரின் மதிப்பு சாமான்யமானதல்ல

(சரசாலை)

'ஒரு சமூகத்தில் அரசியல்வாதிகள், நிர்வாக பீடங்களில் இருப்பவர்களுமே தலைவர்கள் என எண்ணக்கூடாது. எழுத்தாளர்களும் தலைவர்களே.' இவ்வாறு பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) ஆத்மஜோதி நா முத்தையாவின் இந்தோனேஸியாவில் இரண்டு வருட அனுபவம் என்ற நூல் வெளியீட்டு விழாவில் அதனை வெளியிட்டுப் பேசுகையில் கூறினார்.

நல்லை ஆதீனத்தில், ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நந்தி அவர்கள் தொடர்ந்தும் பேசுகையில், "சரித்திரத்தில் இடம்பெற்ற சில அரசியல் தலைவர்கள் எழுத்தை பெரிதும் நம்பினர். தாமும் எழுத்தாளர்களாக இருந்துள்ளனர். வின்சன்ற் சேர்ச்சில் இலக்கியத்துக்கு நோபல் பரிசு பெற்றார். மகாத்மா காந்தி, நேரு, அறிஞர் அண்ணா போன்றோரும் எழுத்தாளர்களே".

தமிழன் பிறநாடு சென்றால் தமிழை மறக்கிறான். இந்நூலின்படி இந்தோனிஷியாவில் குடியேறிய தமிழரில் மூன்றாம் தலைமுறைக்கு தமிழே விளங்காது. ஆனால் இங்கிலாந்துக்கு போனவர்களுக்கு தெரியும் என்றார்.

உ
முருகா

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986




இன்று 15-ம் திருவிழா

காவடிச் சிந்து

எங்கணும் நின்னருள் ஆட்சி — மயில்
என்பதும் வேலென்றும் பேச்சு — அரு(கு)
இருதேவியர் உளராகவும் ஒருபாலனென் றுனையே சொலல்
ஏனோ — சரி — தானோ?

— சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

# இலங்கை அரசு இனத் துவேஷமானது; இதனுடன் விடுதலைப் போராளிகளால்

# நேரடியாகப் பேச முடியாத நிலை!

இலங்கையில் உள்ள தமிழ் ஈழ விடுதலைப் போராளி இயக்கங்கள் அனேகம். அவற்றுள் பிரதானமானவை ஐந்து. ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., எல.ரீ.ரீ.ஈ. (புலிகள்), ரெலோ, புளொட் என்பவையே இவ் ஐந்துமாகும். இவ் ஐந்து இயக்கங்களும் இரண்டு இந்திய அதிகாரிகளை டெல்லியில் வைத்துச் சந்தித்து உரையாடின. போராளிகளுடைய மனக்கண் பார்வையில் இவை முக்கியத்துவம் வகிப்பன ஆயின. பாரத மத்திய அரசினது வெளிநாட்டுச் செயலாளர், ஏ.பி. வெங்கடேஸ்வரன், கொள்கை ஆலோசனைக் கமிட்டியின் தலைவர், ஜி பார்த்தசாரதி ஆகியோரே அந்த அதிகாரிகள் இருவருமாவர்.

இப் பேச்சுவார்த்தைகளின் போக்கு எப்படி இருந்தது? தமிழீழ விடுதலைப் போராளிகளின நீண்ட விமர்சனம் இதோ:

அடிப்படை வாதவிடயங்கள் தெட்டத்தெளிவான வகையில், யதார்த்தபூர்வமாக, அணுகப்பட்டன. இந்திய மத்திய அரசு தனது நிலைப்பாட்டைத் தெளிவுற எடுத்து விளக்கியது. அங்ஙனமே போராளிகளும் தமது நிலைப்பாட்டை ஐயந்திரிபுற விளக்கினர்.

விடுதலைப் போராளிகளின் தமிழ் ஈழக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்க முடியாதிருந்தது. அவ்வண்ணமே, ஆயுதந் தாங்கிய இந்திய தலையீட்டுக்கும் இலங்கைத் தீவில் இடம்கிடையாது எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறுயினும், இலங்கைத் தமிழ் மக்களின் வேணவாக்களை டெல்லி அரசு நன்கு கருத்திற்கொள்ளும் கருத்தில் இருத்தி, நியாயமான ஒரு தீர்வு காணப்பட அது உதவும் அத்தீர்வின் பயனாக, தமிழர்கள் தன்மானத்துடனும், கௌரவத்துடனும் சிங்களவர்களோடு இலங்கையில் வாழும் வகை உறுதியாக்கப்படும் இப்படியாக தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு வெங்கடேஸ்வரன் - பார்த்தசாரதி குழு வாக்குறுதி அளித்தது.

> இலங்கை அரசாங்கத்துடன் தமிழர் கூட்டணி மாத்திரம் தனியாக இணக்கப் பேச்சுக்களில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை
>
> — உமா மகேஸ்வரன்

இனி, போராளிகளுக்கு இலங்கை அரசின் பிரேரணைகளின் தன்மை வெட்டவெளிச்சமாகத் தெரிந்தது. இவ்வாறு தமிழர் விடுதலைப் போராளிகள் கூறினர்.

இலங்கை அரசின் பிரேரணைகள் இணக்கப் பேச்சுக்களுக்கு ஓர் அடித்தளமாக அமையவில்லை என்றன அந்த இயக்கங்கள்.

மேற்படி இயக்கங்களில் மூன்று தம்முள் இணைந்திருந்தன. ஒருங்கிணைந்த இம்மூன்றும், ஈழம் தேசிய விடுதலை முன்னணியை உருவமைத்தன. 'ரெலோ, ஈ.பி. ஆர். எல். எவ்., ஈரோஸ்' ஆகியவற்றின் முக்கூட்டு இணைப்பே இம் முன்னணி. ஒரு கூட்டு விஞ்ஞாபனத்தையும், இம்முன்னணி வெங்கடேஸ்வரனிடம் கையளித்தது. "இலங்கை அரசின் பிரேரணைகளை நாம் நிராகரிக்கிறோம். அதற்கு இன்னின்னவை காரணமாக அமைகின்றன" இப்படிக் கூறுகிறது விஞ்ஞாபனம். (ஏற்கெனவே, தமிழ்நாடு மாநில முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனிடம் இவ்விஞ்ஞாபனம் முன்னணியினால் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.)

"இலங்கை அரசின் பிரேரணைகளானவை இலங்கை நாட்டின் ஒருமைப்பாட்டு அம்சத்தை வெகுவாக வலியுறுத்தின அதனால், அர்த்தபுஷ்டியுள்ள உரையாடல்கள் எவையேனும் நடைபெறுதற்கு அவை தடையாயின. ஆக, தமிழீழ விடுதலைப் போராளிகளும் இலங்கை அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியவில்லை." முன்னணியின் விஞ்ஞாபனம் இவ்வண்ணம் எடுத்துரைக்கிறது.

"மேலும், இலங்கையில் தமிழ் இனம் படுகொலைசெய்யப்படும் நிலைமை வரவர மோசமாகிக்கொண்டு போகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் முனைப்பான இராணுவத் தாக்குதல்கள் உக்கிரமாகி வருகின்றன. அற்பகாரியத்திற்கும் மார்தட்டிப் போர்ச் சவால்விடுக்கும் சிங்கள பௌத்தர்கள் மேன்மேலும் அதிகமாகின்றனர்.

இலங்கை அரசாங்கமோ கேடுகெட்ட, கீழ்த்தரமான, இனத் துவேஷமானது. இவை எல்லாவற்றையும் முன்னிட்டு, இத்தகைய அரசுடன் தமிழர் விடுதலைப் போராளிகள் நேரடிப் பேச்சுக்களைத் தொடர இயலாத நிலை உருவாகியுள்ளது. கலந்துரையாடல்களைப் புதுப்பித்தற்கு அனுகூலமான ஒரு சூழ்நிலை தற்போது நிலவவில்லை" இவ்வாறு ஏது — விளைவு வாரியாகத் தமது நிலைப்பாட்டை ஈழம் தேசிய விடுதலை முன்னணி எடுத்து இயம்புகிறது.

ஈழம் தேசிய விடுதலை முன்னணி மேலும் தனது விளக்கத்தைப் பின்வருமாறு

ஈழம் தேசிய விடுதலை முன்னணி மேலும் தனது விளக்கத்தைப் பின்வருமாறுதொடர்கிறது:"இலங்கை அரசின் பிரேரணைகளானவை தமிழர் தாயகம் எனும் கருத்தேற்பைக் கணித்து ஏற்க மறுத்துள்ளன. தமிழ் மக்கள் ஒடுக்கி நசுக்கப்பட்ட ஒரு தேசிய இனத்தவராக இத்தீவின்கண் உள்ளனர் என்பதையும் அப்பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, அது வெறுமனே சமுதாயங்கள் பற்றிக் கூறிச் செல்கிறது; கேள்விக்கு உட்படுத்தப்படக்கூடிய மாகாண எல்லைகள்பற்றி எடுத்துரைக்கிறது. சுருங்கக் கூறுகில், இப்பிரேரணைகளை வெறும் நிருவாக மறுசீரமைப்பு எத்தனமொன்று என்றுதான் எடுத்துக்கொள்ளலாம். தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இலங்கை அரசின் பிரேரணைகள் ஒருபோதும் அமையமாட்டா." மூன்று இயக்கங்களின் கூட்டு ஆகிய ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் திட்டவட்டமான நிலைப்பாடு இங்ஙனம் பிரதிபலிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் போராளி இயக்கங்கள், தனித்தனியாகவும் தத்தமது கருத்துகளை இந்திய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அதிகாரிகளிடம் தெரிவித்தன.

"புளொட்" இயக்கம் சாதாரணமாக தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பானது. அவ்வியக்கத்தைச் சேர்ந்த உமா மகேஸ்வரன் கூட்டணி பற்றிக் கூறுவதைக் கேட்டுப் பார்ப்போம்: "இலங்கை அரசாங்கத்துடன் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மாத்திரம் தனியாக இணக்கப் பேச்சுக்களில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை. அதுதான் எனது நிலைப்பாடு. கூட்டணி போலும் கட்சிகள் தமக்கென வகுத்திருந்த இலக்குகளை அடையத் தவறியமையே தமிழ் இளைஞர் மத்தியில் ஆயுதமேந்திய போராட்டத்திற்கு வித்திட்டது."

"எனவே, சமாதானத்தை உருவாக்கும் நடைமுறையில் த. ஐ. வி கூட்டணிக்கு ஒரு பங்கு உண்டுதான். ஆயினும், அவ்விடயத்தை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அந்தக் கட்சியை மட்டும்நாம்நம்பி இருத்தலாகாது. இலங்கை அரசின் இறுதியான பிரேரணைகளையிட்டு எனது கருத்துக்களை வெளியிடுவதால் பயன் ஏதும் இல்லை ஏன் என்

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடாத்தி, தமது தமிழ் ஈழக்கோரிக்கையை நெகிழவிடவோ, அதனை எவ்வகையிலும் விட்டுக்கொடுக்கவோ மறுத்து விட்டன.

1986, ஜூலை மாதம் நடுப்பகுதியளவில் கொழும்பில் நடந்தேறிய முதற் சுற்றுப் பேச்சுக்களை தமிழீழ விடுதலைப் போராளிகள் எப்படி 'எடைபோடுகின்றனர்? ஈழம் தேசிய விடுதலை முன்னணியானது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்திக்க மறுத்துவிட்டது. கூட்டணியினர் இலங்கை அரசைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது உள்ளபடியாக நிகழ்ந்தது யாது? அதனையிட்டுக் கலந்துரையாடல்கள் நடாத்துதற்காகவே இச்சந்திப்பு முயற்சி.

போராளிகளைக் கலந்தாலோசித்து வருவதாகப் பாசாங்குபண்ணிவரும் கூட்டணித் தலைவர்கள், அதே வேளை ஒருதலைப் பட்சமான தீர்மானங்கள் எடுத்து வருகின்றனர் என்பது ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் குற்றச்சாட்டு. ஆகையால், 1986, 'ஆகஸ்ட்' மாத நடுப்பகுதியில திரும்பவும் கொழும்புக்குச் செல்வது எனக் கூட்டணி

> 'புரன்ட்லைனி'ல் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தின் இறுதிப் பகுதி இது. முதல் மூன்று பகுதிகளும் இவ் வாரத்தில் வெளியாகின.

றுல், 'வழமைபோல' சிங்கள வர்தரப்பிலுள்ளஎல்லோரதும் ஏகோபித்த (ஒருமித்த) அபிப்பிராயச் சார்பு அவற்றுக்குக் கிடையாது" என்கிறார் "புளொட்" இயக்கத்தின்உமா மகேஸ்வரன்.

'தமிழ் ஈழ விடுதலைப்போராளிகளின் அரசியல் அங்கமாக தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைக் கொள்ளமுடியாதிருக்கிறது. அது தமிழ் மக்களின் ஒரேயொரு பிரதிநிதி தானுமல்ல. எனவே, கூட்டணியையிட்டு நம்பிக்கை வைப்பதில் மனத்துள் சில நிபந்தனைகளைக் கொண்டிருக்க எமது இயக்கமும் தயங்கவில்லை.' இது 'ஈரோஸ்' பேச்சாளர் ஒருவரின் கருத்து. இதேபோன்ற கருத்துக்களையே தமிழ் ஈழம் விடுதலை அமைப்பு எனும்'ரெலோ' கூடத் தெரிவித்தது.

ஆனல் 'ஈ. பி. ஆர். எல். எவ்.' (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி)யின் கண்களுக்கு இவ்வாத விடயம்ஒரே புவியியல் அரசியல் சிக்கல் மயமானதாகக் காட்சி அளித்தது. மேலும், தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாமல் இலங்கையில் சமாதானம் நிலவவேமுடியாதுஎனவும் அம்முன்னணிசுட்டிக்காட்டியது. இலங்கை அரசின் பிரேரணைகளை நிராகரித்த தமிழீழ விடுதலைப்புலிகள், அதேசமயம் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கவும் உடன்பட்டனர்.

எவ்வாறுயினும், 'ஈரோஸ், ஈ. பி. ஆர். எல. எவ்., எல். ரி. ரி. ஈ (புலிகள்). ரெலோ, புளொட்' ஆகிய ஐந்து இயக்கங்களும் யாழ்ப்பாணத்தில்

தீர்மானித்தமை இத்தகைய ஒரு தீர்மானம் ஆகும் எனத் தமிழர் தேசிய விடுதலை முன்னணி கூறிற்று. 'இலங்கையில் தமிழர் தாயகமானது வட மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் புவிப் பரப்புப் பிரதேசங்களையும் கொண்டு அமைந்ததேயாகும்' எனக் கூட்டணி அறிக்கை விடுத்தது. இது, தமிழர்களின் உள்ளபடியான கருததேற்பைவிட உருப்படியான அளவு வேறுபட்டது ஆகும். இவ்வாறு கண்டனப் பகுப்பாய்வு செய்கிறார் 'ஈ. பி. ஆர். எல். எவ்ப்' இன் எல். கேதீஸ்வரன்.

'ஈரோஸ்' இயக்கத்தின் வீ. பாலகுமார் கூறும் கருத்துக்கள் யாவை? 'அரசின் பிரேரணைகளானவை இணக்க உரையாடல்கள் நிகழ்த்துவதற்குப் போதிய ஓர் அடிபபடையாக அமையவிலலை. ஆகையால், சம்பவ நிகழ்வுகள், அவற்றின் போக்கும் வளர்ச்சியும் என்பனபற்றி விமர்சிப்பது பொருத்தமானது. இவ்வாறு கூறிய பாலகுமார், தொடர்ந்தும் கிழக்கு மாகாணம் கூறுபடுதல் பற்றித் தெரிவிக்கும் அபப்பிராயம் வருமாறு:

'இலங்கையின் கிழக்கு மாகாணத்தைக் கூறுபோடுவதை நம் ஏற்பதற்கில்லை. ஏனெனில், அவ்விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிடும் சுதந்திரம் தமிழ் மக்களால் அமிர்தலிங்கத்திற்கோ தொண்டமானுக்கோ பொதுத் தேர்தல் வாதவிடயமாக உரித்தாக்கப்படவில்லை.' இது 'ஈரோஸ்' இயக்க பாலகுமாரின் கருத்து வெளியீடு.

தமிழீழ விடுதலைப் புலிகளானவை முன்வைத்த கருத்துகள் சற்றுக் குறைந்த ஸ்தாயியில் தொனித்தன அண்மையில் அது தனக்கென நிர்ணயித்துக் கொண்ட அடக்கமான ஸ்தானத்துக்கு ஏற்றதாக அது தென்பட்டது. தவிரவும், இணக்கப் பேச்சுக்களில் பங்குபற்றுதலையிட்டு விருப்பம் தெரிவிக்குமாறு ஏற்படும் போது, அவ்வண்ணமே காலகட்டத்தில் தீர்மானித்துக் கொள்வது உசிதமாக இருக்கும் எனப் புலிகள் இயக்கம் கூறியது.

---

## வருடாந்த கூட்டம்

(நல்லூர்)

யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தின் வருடாந்தக் கூட்டம் வை. எம். சி. ஏ. மண்டபத்திலுள்ள சிற்றாலயத்தில் திருநற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகியது. அருட்திரு. யே. சர்வானந்தன் அடிகளார் ஆராதனையை ஒப்புக்கொடுத்து அருளுரை நிகழ்த்தினார்.

வை. எம். சி. ஏ. மண்டபத்தில் சங்கத்தின் உப-தலைவர் அருட்திரு. யே. சர்வானந்தன் அடிகளார் தலைமையில் வருடாந்தக் கூட்டம் ஆரம்பமாகியது.

இயக்குநர் சபைப் பிரதிநிதிகளாக திருவாளர்கள் சாம். எஸ். சதாசிவன், கே. என். வை. மொறிஸ், எஸ். பி. சீவானந்தம், எஸ். ஜி. தேவா, எஸ்.பி. அருமைநாயகம் ஆகிய ஐவரும் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. எம். சி. பிரான்சிஸ்சும், உப-தலைவர்களாக திருவாளர்கள் எஸ். பி. அருமைநாயகம், எஸ். அற்புதானந்தன் ஆகியோரும், பொருளாளராக திரு. ரி. பரமபதயும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மின்னிணைப்பு துண்டிப்பு அறிவிப்பு

(அளவெட்டி)

மின்சார சபையிடமிருந்து வீடுகளுக்கு நிரந்தர மின் இணைபபை ஏற்படுத்தியுள்ள குடாநாட்டுப் பகுதியிலுள்ள வீட்டுக் குடியிருப்பாளர்களில் பெரும் பாலானோர்க்கு மின் இணைப்பை நிறுத்துவதற்குரிய காலக்கெடு விதிக்கப்பட்ட கடிதங்கள் கொழும்பு மின்சார சபை தலைமையலுவலகத்திலிருந்து கிடைத்துள்ளன.

மின்சாரம் பாவித்த காலத்துக்குரிய பணத்தை நீண்ட காலமாக கட்டாமல் நிலுவைத் தொகையாக விட்டு வைத்தவர்களுக்கே தபாலகங்களுடாக மேற்படி கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

## புதிய மின்மாற்றி நிலையம்

(சுன்னுகம்)

ஏழாலை உப அலுவலகப் பகுதியின் மின் விநியோகப் பணியினைச் சீர்செய்யும் நடவடிக்கையாக ஏழாலை மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் புதிய 'ருன்ஸ்போமர்' ஒன்று பொருத்தப்படவிருக்கின்றது.

இருபத்தாறுயிரம் ரூபா மதிப்பீட்டில் இதற்கான கட்டிடம் அமைக்கும் வேலையினை ஏழாலை முத்தமிழ் மன்ற சனசமூக நிலையம் பொறுப்பேற்று கட்டுவேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## பிரதிநிதி வருகை

(சரசாலை)

வடபகுதியில் காணப்படும் சுதேச வைத்திய மூலிவகைகளை கொள்வனவு செய்யும் நோக்குடன் அரசாங்க ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபன பிரதிநிதி எஸ். ஸ்ரீகாந்தா யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ளார். கைதடி ஆயுள்வேத வைத்திய நிலையத்தில் தங்கியுள்ள இவர் ஆயுள்வேத வைத்தியர்களையும் சந்தித்து வருகிறார்.

## செவன நிதிமூலம்...

(வேலணை)

அரசாங்கத்தின் பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் செவன நிதியின் மூலம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பத்துக் கிராமோதய சபைகளில் இருந்தும் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை தேசிய வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. த பு. முருகையா மேற்கொண்டுள்ளார் மாதாந்தம் அரசின் நன்கொடைப் பணம் பெறுபவர்களே இந்த செவன நிதி திட்டத்தின் கீழ் நன்கொடைப்பணமாக மேற்படி ஐயாயிரம் ரூபாவை பெறவுள்ளனர்.

இப்பணத்தைப் பெற்றவர்கள் மீளவும் தாம் பெற்ற பணத்தை திருப்பி செலுத்த வேண்டியதில்லை. இவர்களைத் தெரிவு செய்யும் வேலையில் வீடமைப்பு உத்தியோகத்தர் திரு. செ. தெய்வேந்திரன் ஈடுபட்டுள்ளார்.

## சிரமதானம்

(கரவெட்டி)

நன்கு சுகாதாரத்தைக் கடைப்பிடித்து நல்ல ஆரோக்கியமாக வாழவேண்டும் என்ற நோக்கத்துடன் கரவெட்டி கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தினர் அப்பகுதி மக்களின் உதவியுடன் அப்பதி மக்கள் உபயோகிக்கும் தளபில் குளத்தினை சிரமதானம் மூலம் இறைத்து துப்புரவு செய்துள்ளார்.

## மாதா ஆலய உற்சவம்

(சுன்னாகம்)

மயிலங்கூடல் – இளவாலை அன்னை வேளாங்கண்ணிமாதா ஆலய வருடாந்த உற்சவம் 11-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 14ம் திகதியன்று கூடு சுற்று விழாவுடன் முடிவடையும் ஆரம்ப கொடியேற்ற வைபவத்தை பங்குத்தந்தை வண. பிதா பற்றிக் ஆரம்பித்துவைப்பார்.

## நெல்லியடி வீதி இருள்மயம்

(கரவெட்டி)

நெல்லியடி பட்டின சபைக்கு உட்பட்ட வீதிகள் இன்று பெருமளவிற்கு இருளில் மூழ்கி இருக்கிறது. இதன் விளைவாக நெல்லியடி பாதுகாப்புச் சபை தொண்டர்கள் ரோந்து சுற்றுவதற்கு கடினமாக இருப்பதாக மேற்படி பாதுகாப்புச் சபைச் செயலாளர் திரு. ஜே. ஜி ராஜேந்திரம் வடபகுதி உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## திருத்தவேலை ஆரம்பம்

(சரசாலை)

கோப்பாய் கைதடி வீதி திருத்தவேலைகள் இவ்வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன போக்குவரத்துச் செய்வதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக விளங்கிய இப்பாதை திருத்தப்படுவதால் பொதுமக்களும் வாகனச் சொந்தக்காரர்களும் மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

## திருட்டு

(சுன்னாகம்)

போராட்டக் குழுக்களின் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக இராணுவத்தினர் வெளி செல்லும் நடவடிக்கையினை நிறுத்திக் கொண்டுள்ளதால் தாம் கைவிட்டுச் சென்ற வீடுகளைப் பார்க்கச் சென்ற வசாவிளான், கட்டுவன், குரும்பசிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அவர்களால் விட்டுச் செல்லப்பட்ட பாவனைப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இரவு நேரத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர் கோஷ்டியொன்று மோட்டார், மின்மானி உட்படப் பல பொருட்களைத் திருடியுள்ளது: இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

## அடிக்கல்

(சுன்னாகம்)

கீரிமலை சனசமூக நிலையத்திற்குப் புதிய கட்டடமமைப்பதற்கான அடிக்கல் 20ம் திகதி கீரிமலை நகுலேஸ்வர ஆதீனப் பிரதமகுரு கு. நகுலேஸ்வரக் குருக்களினால் நாட்டி வைக்கப்பட்டது.

## இன்று ஆரம்பம்

(குருநகர்)

குருநகர், புனித ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்த திருநாள் உற்சவம் இன்று 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாக உள்ளது.

## பயிற்சி நெறி

(நீர்வேலி)

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள பத்து பிரதேச பாவனையாளர் சங்கங்களின் உறுப்பினர்களிற்கான பயிற்சிநெறி வகுப்பு ஒன்று அண்மையில் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் கோப்பாய் உதவி அரச அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பெருந்தொகையான சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட இப் பயிற்சிவகுப்பில் திரு. சி. த மார்க்கண்டு (உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர்) திரு. ம. றூபன், திரு. க றட்ணம் ஆகியோர் பயிற்சி நெறிகளை நடத்தினர் பிரதேச பாவனையாளர் சங்க செயலாளர் திரு க. ச அழகரட்ணம் நன்றி நவின்றார்.

## அடிக்கடி மின்தடை

கடந்த சில நாட்களாக மானிப்பாய் பகுதியில் இரவு நேரம அடிக்கடி கணத்துக்கு கணம் மின்சாரம் தடைப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு சுமார் பத்து தடவைகள் இவ்வாறு மின் தடை ஏற்பட்டது இது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

★ ஈரான் எண்ணெய்க் குதம் மீது ஈராக் தாக்குதல்
★ ஈரான் ஜனாதிபதி கொமெய்னி எச்சரிக்கை

# வளைகுடாவின் எரிபொருள் ஏற்றுமதி பாதிக்கப்படும்

(தெஹ்ரான்)

ஈரானின் எண்ணெய் குதங்கள் மீது ஈராக் தொடர்ந்தும் இனிமேல் தாக்குதல்கள் நடாத்தினால், வளைகுடாவில் உள்ள எல்லா எரிபொருள் ஏற்றுமதிகளையும் பாதிக்கக்கூடிய மிகப்பெரிய எதிரடி தாக்குதலை தாம் நடாத்துவோம் என்று ஈரான் ஜனாதிபதி அல் கொமெய்னி எச்சரித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நடைபெறும் ஈரான், ஈராக் சண்டையில் ஈரானின் எண்ணெய்க் குதங்கள் மீது ஈராக் ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதல்களை நடாத்தி வந்ததையிட்டு ஜனாதிபதி கொமெய்னி இவ்வாறு எச்சரித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஈராக் — ஈரான் யுத்தத்தில் தமது துருப்புக்களில் ஒரு பகுதியினரே ஈடுபட்டனர் என்றும், இனிமேல் முழு இராணுவ பலமும் பயன்படுத்தப்பட்டு ஈராக் மீது தாக்குதல் நடாத்தப்படும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

## அதிபர் கதிரவேல் இனியபண்பாளன்

கல்வியிற் பெருந்தக்க யாவுள, கல்வியே கருந்தனம்' என்று கடமையே கண்ணாகக் கல்விச் சேவைக்கே தம்மை அர்ப்பணித்தவர், 27. 08. 86 இல் ஓய்வு பெறும் திரு ஆர். கதிரவேலு, அதிபர் அவர்கள். இவர் வதிரி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தமது ஆசிரிய சேவையை ஆரம்பித்துப் பின்னர் மாத்தளையிலும் அதனைத் தொடர்ந்து அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலையிலும் சேவை புரிந்தார். அதன் பின்னர் அதிபராகப் பதவி உயர்வு பெற்று கரவெட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இற்றைவரை கடமையாற்றித் தமது 35 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளார்.

திரு. ஆ. கதிரவேல் அவர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் உடுப்பிட்டிக் கிளைச் செயலாளராகவும், யாழ். மாவட்ட நிர்வாக உறுப்பினராகவும் விளங்கினார். கல்விச் சேவைக்காய்த் தம்மை அர்ப்பணித்ததோடு மட்டுமன்றி, பல சமூக ஸ்தாபனங்களோடும் தம்மை இணைத்துக் கொண்டார். இவர் கட்டைவேலி–நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை உறுப்பினராகவும் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் தலைவராகவும், அல்வாய் மனோகரா கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், அல்வாய் தெற்கு பாவனையாளர் சங்கச் செயலாளராகவும் சமாதானசபை உபதலைவராகவும் விளங்கியதோடு, அல்வாய் தெற்கு கிராமோதய சபைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இன்றும் அகில இலங்கை சமூக சேவா சங்கத்தின் தலைவராகவும் அல்வாய் மனோகரா கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். சைவசமயத்தில் மிகுந்த ஈடுபாடும் இறைபக்தியும் மிக்கவராய் எவரோடும் இன்முகத்தோடு பழகும் இவர் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிற் பரிபாலன சபை உறுப்பினராகவும் இருந்து கொண்டு தமது சிறப்பான சேவைகள் மூலம் அல்வாய்க் கிராம மக்கள் விரும்பி நேசிக்கும் ஒருவராகவும் விளங்கி வருகிறார். 22 08 86 இல் தமது சஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடும் இவரையும் இவரது துணைவியாரையும் பலலாண்டு காலம் இனிது வாழ்கவென அல்வாய்க் கிராம மக்கள் வாழ்த்தி நிற்கின்றனர்.

–த. கலாமணி

## சீன-ரஷ்ய எல்லையில் 20 பேர் காயம்

# ராணுவம் மோதல் ஒரு சீன வீரர் பலி

(பீக்கிங்)

சீன — ரஷ்யா எல்லைப் பகுதியில் காவலில் உள்ள இரு பகுதி இராணுவத்தினரும் மோதிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது இச்சம்பவத்தில் சீன இராணுவ வீரர் ஒருவர் பலியானார். இருபது பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால் சோவியத் ரஷ்யா இச்சம்பவத்துக்குமௌனம் சாதித்துள்ளது.

சீன எல்லைப் பகுதியினுள் சோவியத் துருப்புக்கள் சுட்டதாகவும், சீன பிரஜைகளும் இதில் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சோவியத் துருப்புக்கள் சில சீன பிரஜைகளையும் தம்முடன் அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
யாழ். பீச் இன்ஸ் ஆதரவில்
ஜோ. எகட்டன்
வழங்கும்
பனம் பொருள் உணவு
அறிமுகப்படுத்தும் விழா
7-9-86 அன்று காலை 10.30 முதல் ஆரம்பமாகின்றது.
எங்கள் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழ உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.
மறந்து விடாதீர்கள் 7-9-86 காலை 10.30 மணியளவில் உங்களை வரவேற்க நாங்கள் காத்திருக்கின்றோம்.
விளம்பர வடிவமைப்பு:-
ஜோ. எகட்டன் + மணிக்குரல் மேஜர் ஷண் = 'செனித் ADS'
வட இலங்கையில் ஒரே ஒரு விளம்பர முகவர்கள்!
ஜோ. எகட்டன்,
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மே/பா. யாழ். பீச் இன்ஸ்,
139, கடற்கரை வீதி, யாழ்நகர்.
(B/1487)

பிரயாண ஒழுங்குகள்
அபூதாபி
ஹோட்டல் வேலை, கிளீனர்
எந்தவித தாமதமும்இன்றி பயணஒழுங்குகள்செய்து கொடுக்கப்படும் அதற்காக வேண்டிய 3புகைப்படங்கள் பாஸ்போட்டுடன்நேரடியாக 27-ம் தேதிக்குமுன் தொடர்பு கொள்ளவும்.
சவூதி அரேபியா
ஒப்பின் விசா றைவிங் 800 SR ஏயாப்போட் கிளீனர்.
டென்மார்க்
நாம் மீண்டும் டென்மார்க் பயணங்களை ஆரம்பித்துள்ளோம். டென்மார்க் செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
ஆ. அன்னம்மா இந்திரகிரி,
நவாலி றோட், R/25338 ஆனைக்கோட்டை.

ஈழமுரசு

## இரண்டு சடலங்களும் மீட்பு

(வவுனியா)

புளியங்குளம் - கனகராஜன் குளம் வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ராணுவ துப்பாக்கிப் பிரயோகத்தினுல் ட்ராக்டரில் செல்லும்போது இறந்தவர்களின் சடலங்கள் உறவினரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இருபிள்ளைகளுக்குத் தந்தையான சு. செல்வராசா (25) மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான சு. சதாசிவம் (35) ஆகியோரே இவ்வாறு மரணமானவர்களாவர். ராணுவத்தினரால் எரிக்கப்பட்ட ட்ராக்டர் செல்வரத்தினம் என்பவரது என அடையாளம் காணப்பட்டது.

ஆயுதக் கோஷ்டியின் கைவரிசை:

# மட்டக்களப்பு தபாற் கந்தோரில் பெறுமதியான பொருட்கள் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தபாற் கந்தோரினுள் நேற்று முன்தினம் இரவு இனம்தெரியாத சிலர் ஆயுதபாணிகளாகச் சென்று பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இரவு ஏழு மணியளவில் திடீரென உட்புகுந்து உள்ளே இருந்த ஊழியர்களை மேல் மாடிக்குக் கொண்டு சென்றபின் இக் கொள்ளையை நடாத்தினர்.

இங்கிருந்து நான்கு சுவர் மணிக்கூடுகள், இரு தட்டச்சு யந்திரங்கள், மூன்று பெற்ரோமாக்ஸ், ஒரு தராசு உட்பட முத்திரைகளையும் இவர்கள் எடுத்துச்சென்றனர்.

இக்கந்தோர் மேற்பார்வையாளர் திரு. சி. நடராசா களஞ்சிய திறப்பைக் கேட்டுத் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திறப்பு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்படுவதாகதெரிவிக்கப்பட்டது.

## இலவச பாடநூல்கள் இன்று அதிகாரிகளிடம் கையளிப்பு

(புங்குடுதீவு)

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கெனப் பெருந்தொகையான பாடநூல்கள் யாழ். இந்துமகளிர் கல்லூரியை வந்தடைந்துள்ளன. இப்பாட நூல்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்தில் உள்ள வட்டாரக்கல்வியதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

கல்விச் சேவைகள் அமைச்சினுல் இப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இப்பாட நூல்கள் அடுத்த தவணை ஆரம்பத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும். இவ்வாண்டு முன்னரும் இருதடவைகள் கல்விச் சேவைகள் அமைச்சினுல் இலவச பாடநூல்கள் இங்குவழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### கல்முனைப் பகுதி...

பெறுகின்றன. இத் தபால் அலுவலகததை மீண்டும் இயங்க வைக்குமாறு பலர் அரசிடம் கேட்டபோதும், பல கொள்ளைகள் இங்கு இடம் பெற்றதால் பாதுகாப்பு இன்மை காரணமாக தற்போதைக்கு திறக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பிரயாண ஒழுங்குகள்

சவூதிஅரேபியாவில் கனரக வாகன இயக்குனர்கள், சுட்பவைசர்கள் உடன் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

அபுதாபியில் கட்டிடத்துறையில் எல்லா தரத்திலும், பூந்தோட்ட பராமரிப்பாளர்களுக்கும் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு:
R. K. பரமசுவாமி
ஆஸ்பத்திரி லேன்,
இணுவில்.

R/25340

## மரக்காலை இடமாற்றம்

68, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிச் சந்தியில் நடாத்தப்பட்ட வி. சோமசுந்தரம் மரக்காலை, எமது வாடிக்கையாளரின் பாதுகாப்புக்கருதி காங்கேசன் வீதி, மனோகராத் தியேட்டர் சந்திக்கு அருகாமையில் உள்ள கோபால் ஒழுங்கையில் மாற்றப்பட்டுள்ளது. கூடிய தொகைக்கு சாமான் வேண்டுவோர்களுக்கு இலவச டெலிவரி செய்து கொடுக்கப்படும். நன்றி!

வி. சோமசுந்தரம்.

R/25339


"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 24-8-1986 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437

## கஷ்டப்படும் அகதிகளுக்கு ரோட்டரி கழகத்தின் உதவி

(கிளிநொச்சி)

மிகவும் கஷ்ட நிலையிலுள்ள கிளிநொச்சி அகதிகளுக்கு கிளிநொச்சி பரந்தன் ரோட்டரி கழகம் உதவிபுரிய முன்வந்துள்ளது.

கிளிநொச்சி அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்ட மிகவும் வறிய மக்கள் அதிகமாக தங்கியிருக்கும் கோணாவில் அகதி முகாமில் உணவுப் பொருட்களுக்கு மிகவும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. சுமார் 8,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை பகுதி பகுதியாக இம் முகாமுக்கு வழங்கி வருவதாக மேற்படி கழகச் செயலாளர் திரு. எஸ். சிவகுருநாதன் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலுள்ள ஏனைய ரோட்டரிக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு முடிந்த அளவு உதவிகளை கிளிநொச்சி அகதிகளுக்காக வழங்க ஏற்பாடு செய்வதாகவும் அவர் கூறினர்.

இன்று

## குருநகரில் சிரமதானம்

(குருநகர்)

இன்று காலை ஏழுமணி தொடக்கம் மாலை ஐந்துமணி வரை குருநகர்ப் பகுதியிலுள்ள வடிகால் அமைப்புகளை சீரமைப்புச்செய்யும் சிரமதான இயக்கமொன்றைக் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் சிரமதான வேலைகளுக்கு யாழ். மாநரசபைஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் ஏற்பாட்டில் மாநகர சபை ஊழியர்கள், வாகனங்கள், உபகரணங்கள் முதலான ஒத்துழைப்புக் கிடைப்பதுடன் வேறுசில அமைப்புகளும் உதவுவதற்கு முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வேலணை...

வரின் சடலத்துக்கு அருகில் காணப்பட்டார். மணமகளின் ஒரு சகோதரர் வன்செயல்களின்போது காலியில் கடையொன்றில வைத்துக் கொலை செய்யப்பட்டதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள பெருந்தொகையான வர்த்தகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வங்கி ஊழியர்கள் மரணச்சடங்கில் பங்குபற்றி தம் துக்கத்தை தெரிவித்தனர். வேலணைக் கிராமமே இம் மரணத்தினுல் நேற்றுச் சோகமயமாகக் காட்சியளித்தது.

### சட்டவிரோத..

ஒழுங்கு விதிகளுக்கு முரணுக மின்சாரம்பெறுவதுஅதிகரித்து வருகிறது. இதனுல் ஏற்கனவே பல மின்மாற்றிகள் பல இடங்களில் வெடித்து பழுதடைந்து விட்டன. மேலும் ஒழுங்கற்ற முறையில் மின் பெறுவதால் உயிர்சேதங்கள்கூட ஏற்படுகின்றன. நெருக்கடி மிக்க இச்சூழ் நிலையில் எம்மக்களைநாம்பூரணமாக புரிந்து கொள்ளும் அதே வேளை முழுப்பிரதேசமும் இருளில் சூழ்தும் ஆபத்தை தடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். எனவே எம்மக்கள் அனைவரும் மின்சார சபைகளுக்கு கட்டுப்பட்டு அவர்களின் சேவை தொடர பரிபூரணமாக ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் தமிழ் இனத்திற்குரிய உணர்வோடு மின்சார சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய மின்சாரசபை ஊழியர்கள் எம் மக்களின் அத்தியாவசிய தேவைக்கும், வீட்டுத் தேவைக்கும் உடன்வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

## ஒரு வாழையில் 4 பொத்திகள்

(வல்வெட்டித்துறை)

வாழையின் இடைத் தண்டால் அதிசயமான குலை வந்துள்ளது. வல்வெட்டித்துறை காட்டுவளவு என்னுமிடத்திலுள்ள வீடொன்றில் உள்ள வாழைமரத்தின் நடுப் பகுதியால் குலை தள்ளியதைப் பெரிதாக எடுக்காத போதிலும் அது பெருத்து வரும்பொழுது சுமார் இரண்டு அடி நீளத்தில் நான்கு பொத்திகளுடன் காட்சியளித்ததைக்கண்டு இப் பகுதி மக்கள் பலரும் சென்று பார்வையிட்டனர்.

பாகிஸ்தான்

## 1990-க்குமுன் தேர்தல் இல்லை

பாகிஸ்தானில் இப்போதைக்கு தேர்தல் எதனையும் நடத்தும் உத்தேசம் தமக்கு இல்லையென்றும், 1990 ஆம் ஆண்டிலேயே இனிமேல் தேர்தல் நடைபெறுமென்றும், பாகிஸ்தான் ஜனதிபதி ஸியா உல் ஹக் சவூதிஅரேபியா பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

### முறிகண்டியில்...

ருந்த போது முறிகண்டியில் வைத்து தம்மால் நேரடி மோதல் தொடுக்கப்பட்டதாகப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே ஒன்றரை மணிநேர கடும் மோதல் இடம்பெற்றது.

### ராணுவத்தினரின்...

செல்ல ஒழுங்குகள் செய்யுமாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு செயலாளர் டாக்டர் என. பரராஜசிங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்

நேற்றுமுன்தினம்இவ்வாறுக யாழ். பயணிகளின் கொழும்புப் பயண தாமதத்தையும் அவர் விரிவாக எடுத்துக்கூறியுள்ளார்.

ராணுவத்தினர் இவ்வாறு பவனியாக செல்வதால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் சம்பவங்கள் பற்றி கொழும்பில் உள்ள கூட்டணிப் பிரமுகர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தகருக்கு பரந்தனில் புதிய கடைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்களுக்குப் பரந்தனில் கடைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி அசம்பாவிதங்களையடுத்து கிளிநொச்சிநகரம் இயங்கமுடியாமல் இங்குள்ள வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளமையினுல் இவர்களில் மிகவும் வசதி குறைந்த வர்த்தகர்களுக்கு பரந்தனில் கடைகள் வழங்க பரந்தன் வர்த்தகர் சங்கத்தினுல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உண்ணுவிரத எதிரொலி

## பூசகர்கள் கடத்தல்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பணிப்புலம் அம்பாள் ஆலய முன்றலில் பரம்பரைப் பூசகர்கள் தங்கள் உரிமைக்காக நேற்று உண்ணுவிரதமும்சத்தியாக்கிரகமும் நடத்தினர். இந்த உண்ணுவிரதப் போராட்டத்தை ஏற்பாடு செய்த இரு பூசகர்களும் இன்னும் ஒருவருமாக மூவர் வெள்ளி இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளனர், அதேவேளையில் வழிபடுவோர் சபையினர் மேற்கொண்டுள்ள திருப்பணி வேலைகளும் நடைபெறுகின்றன.

## சேமிப்புச் சங்கம்

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன் புரிச் சிக்கனச் சேமிப்பு சங்கத் தலைவராக திரு எஸ். செல்வராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப- தலைவராக திரு. ரீ. இராசசிங்கமும் செயலாளராகச் செல்வி ஏ. லூர்த்தம்மாவும் பொருளாளராக திரு. கே. வேலாயுதமும், 5 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இச் சிக்கன சேமிப்பு சங்கம் இதுவரை உறுப்பினர்களுக்கான சாதாரண கடனாக 55,000 ரூபாவையும், விசேட கடனாக 22,000 ரூபாவையும் வழங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சிக் கருத்தரங்கு

(சுன்னுகம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டிகளின் போது மத்தியஸ்தர்களாகக் கடமைபுரியும் சகலருக்கும் பயிற்சிக் கருத்தரங்கொன்று இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

உடற் பயிற்சிக் கல்வி அதிகாரி திரு. வ. கணேசலிங்கம் இது தொடர்பாக தகவல் தருகையில் எதிர்வரும் 7-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு பிரதி ஞாயிறு தோறும் நடத்தப்படும் இப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றவிருப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 5-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமெனக் கூறினர்.

### நிலாவெளியில்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கூட்டமொன்றுக்கு சென்று கொண்டிருக்கும் போதே இவர் மீது தாக்குதல்மேற்கொள்ளப் பட்டதாம்.